1971 ஜூலை 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கருத்தடைத் திட்டம் என்று சொல்கின்ற பொழுது முறைப்படி நியாயமான காரணங்களுக்காக அப்படிச் செய்வது கடுமையான குற்றம் என்று கூறுவதற்கு இடம் இல்லை. அப்படியில்லாமல் முறையோடு செய்யாமல் யாருடைய நலனுக்கும் தீங்கிழைக்கின்ற எண்ணத்தோடு செய்தால் அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

கிராமப்புற மருத்துவர்கள்.

* 397 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மருத்துவர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) அவர்களுக்கு அளிக்கப்படும் மானியத் தொகையை மாற்றிச் சம்பளமாக வழங்குவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கிராம மருத்துவர்கள் பல வருடங்களாகப் பல இடங்களிலே வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலே அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயித்து நல்ல நிலைமையிலே இருக்கச் செய்தால்தான் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே அந்த வகையிலே அந்தவிதமாகச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கிராம மருத்துவர்கள் பெரும்பாலும் ஒரு துறையிலே பயின்று பட்டம், டிப்ளமா பெற்று அலுவலுக்கு வந்தவர்கள் அல்ல. ஓரளவு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் "பி" கிளாஸ் மருத்துவர்களாக நியமிக்கப்படுவதற்கு அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அவர்களை முழு நேரப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பிட்ட நேரத்திலே அவர்கள் மருந்தகத்தில் வந்து வேண்டிய பணியை ஆற்றிவிட்டு மற்ற வேளைகளிலே சுய காரியங்களைச் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் மூலமாக நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு சப்சிடி தொகை வழங்கப்படுகின்றது. ஏற்கனவே 120 ரூபாய் என்ற அளவிலே வழங்கப்பட்டது இப்பொழுது ஊதியக் குழுவினுடைய ஆலோசனைப்படி மாதம் 150 ரூபாய் என்ற அளவிலே வருடத்திற்கு 1,800 என்ற அடிப்படையிலே அவர்களுக்கு சப்சிடி வழங்கப்படுகின்றது. அந்த அளவுக்குத்தான் அரசு நிலைமையை உயர்த்த முடிந்திருக்கிறது.